**வெள்ளவாய பிரதேச சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வெள்ளவாய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெள்ளவாய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்களை சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 23,550 ஆன நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 116,420 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது நூலக புத்தகங்களின் மீதி ரூபா 92,870 ஐ கூடுதலாக காண்பித்து சீராக்கம் செய்வேன். | கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் பெறுமதி சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | முன்னைய ஆண்டின் நூலக புத்தகங்கள் கொள்வனவுக்காக செலுத்தப்பட்ட ரூபா 500,000 தொகை மீளாய்வாண்டின் செலவினம் ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 நிதிகடகூற்றுக்களை தயாரிக்கும் போது கடன்கொடுத்தோர் ஒதுக்கீடு மற்றும் மூலதனச் செலவினம் தொடர்பாக பரீட்சித்து கணக்கு பதிவினை வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது குறித்த அத்தியாயங்கள் சரியாக இணங்க காணப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்ட ஆயுர்வேத இருப்பு ரூபா 84,665 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | ஆயுர்வேத இருப்பு பதிவேடு பரீட்சிக்கப்பட்டு மீதிகளைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | இருப்புப் பெறுமதி சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | சபையால் பராமரித்துச் செல்லப்படுகின்ற கடன் கொடுத்தோர் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 492,898 ஆன கடன் கொடுத்தோர் | அலுவலகத்தின் கடன் கொடுத்தோர் பதிவேட்டினை பரீட்சித்து எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை | கடன் கொடுத்தோர் பெறுமதி சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகள் நானாவித கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எடுப்பேன் | |
| (உ) | மீளாய்வாண்டில் ஆனபள்ளம மயானத்தின் குழாய் கிணருக்கான நீர் பம்பியை பொருத்து வதற்காக செலவிடப்பட்ட ரூபா 320,000 ஆன செலவினம் மூலதனமாக் கப்பட்டிருக்கவில்லை. | 2023 நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது இச்செலவினத்தை மூலதனமாக்குவேன். | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி இனங் காணப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஊ) | வெள்ளவாய வாரச்சந்தை பல்நோக்கு கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்குரிய மீளாய்வாண்டிற்காக பிரதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்திட்ட அலுவலகத்திலிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா 1,906,431 ஆக இருந்ததுடன் அத்தொகையை நிலுவை மூலதனம் மானியங்களின் கீழ் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2023 நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பெற வேண்டிய நிர்மாண மானிய அட்டவணையில் சீராக்கி இத்தவறை சரி செய்வேன். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (எ) | மீளாய்வாண்டில் மஹிந்த ராஜபக்ஷ மாநாட்டு மண்டபத்தின் மலசலகூட முறைமையை திருத்தம் செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 185,000 ஆன பகுதிக் கொடுப்பனவு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் பெற வேண்டியவற்றின் கீழ் மறை மீதி ஒன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த நிர்மான கொடுப்பனவு பட்டியல் விவரம் பரீட்சிக்கப்பட்டு மீதிகளை சீராக்கம் செய்வேன் | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஏ) | மீளாய்வாண்டின் கணக்காய்வு கட்டணங்களுக்காக நிதிக் கூற்றுக்களில் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 வருடாந்த பாதிட்டு அறிக்கையின் செலவினத் தலைப்பு 105.9 ஏனைய செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 10,000 ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஒதுக்கீடு சரி செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்படும் மீதிகள் / மற்றும் அதற்காக வழங்கப்பட்டிருந்த பட்டோலைகள் ஆவணங்களின் பிரகாரம் மீதிகளுக்கு ரூபா | குறித்த நிலுவை மீதிகள் நிதிக்கூற்றுகளில் சரியானதாகவும் தற்போது பயன்படுத்தப்படாத ஆதனங்களுக்குரிய நிலுவைகள் இல்லை என்பதாகவும் தகவல்கள் தேடி பதிவேடுகளுக்கு | ஆவணங்கள் மற்றும் அட்டவணைகள் சரியாக நாளதுவரையாக்கி இணக்கமிண்மைகளு க்கு காரணங்களைத் |

| | | |
|---|---|---|
| 2,996,281 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | உள்ளடக்குவதற்காக விடயப் பொறுப்பு உத்தியோகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அறியத் தருகிறேன். | தேடி சீராக்கப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 276,989,839 கூட்டுப்பெறுமதியான 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கை, காலப் பகுப்பாய்வு, பதிவேடு, மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப் படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | சபைக்கு உரிய காணி மதிப்பீடு செய்யப்பட்டு தீர்வு செய்வதற்கும் ஏனைய பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளை நாளாவது வரையாக பேணிச்செல்வதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன் | நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நி.பி 1646 | 2022 ஆம் ஆண்டிற்குரிய சபைக்கு சொந்தமான 06 வாகனங்களின் ஓட்டக் குறிப்புகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை | சபைக்குச் சொந்தமான வாகனங்களுக்கு ஓட்டக் குறிப்புகளை ஒவ்வொரு மாதமும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை | சபையால் பேணிச் செல்லப்பட்டிருந்த விதி விளக்குகள் பதிவேட்டின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் 1585 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்த போதும் வீதிகளுக்கு வெளிச்சமூட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்க வில்லை | காட்டு யானை அச்சுறுத்தலுடன் கூடிய இடங்களுக்கு மின்சார சபையுடன் கலந்துரையாடி வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் உடன்படிக்கை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன் | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,240,661 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,871,403 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 6,246,032 | 6,092,873 | 2,037,152 | 3,862,439 | 6,396,032 | 6,029,505 | 2,634,785 | 4,339,154 |
| (ii) | வாடகை | 15,116,000 | 10,264,672 | 5,445,948 | 4,832,094 | 16,760,400 | 8,866,457 | 3,732,217 | 5,174,359 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 6,361,025 | 2,201,106 | 2,156,106 | 45,000 | 8,352,250 | 1,858,495 | 1,807,495 | 51,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,987,000 | 1,755,755 | 483,272 | 1,272,483 | 2,762,000 | 5,226,027 | 447,082 | - |
| | | 30,710,057 | 20,314,406 | 10,122,478 | 10,012,016 | 34,270,682 | 21,980,484 | 8,621,579 | 9,564,513 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 20,314,406 ஆக இருந்த போதும் ஆண்டின் இறுதிவரை அதில் ரூபா 10,012,016 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 49 சதவீதமாக இருந்தது. | நடப்பாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 50 சதவீதத்தை விட அதிகமாக அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன் கடந்த ஆண்டுக்கு ஒப்பாக செயன் முன்னேற்றம் ஒன்றை காட்டுகின்றது. நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பட்டியலிடப்பட்ட வருமானத்தை அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 6,015,905 ஆன வீதவரி வருமானத்தில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 3,844,575 ஆக இருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 64 சதவீதமாக இருந்தது. மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வீதவரி அறவீடு 16 சதவீதமாக இருந்தது. | வருடக்கணக்காக தொடர்ந்தும் நிலுவை வீதவரி காணப்பட்டமையால் அறவிடப்படுகின்ற வீதவரி நிலுவைத் தொகைக்கு ஈடு செய்யப்பட்டதாகவும் நடப்பாண்டு அறவீடுகள் குறைந்த மட்டத்திலும் காணப்பட்டன. பல ஆண்டுகளாக வருமான பரிசோதகர் பதவி வெற்றிடமாக காணப்படுவதால் வருமான அறவீடு குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | பட்டியலிடப்பட்ட வருமானத்தை அறவிடப்பட வேண்டியதுடன் நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 7,603,482 நிலுவை கேள்வி ஆதனங்கள் குத்தகை வருமானத்திலிருந்து 2022 திசெம்பர் 31 உள்ளவாறு 7,138,378 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை கேள்வி ஆதனங்கள் குத்தகை வருமான அறவீடு 6 சதவீதம் ஆக இருந்தது. | வருடக்கணக்காக ஆதனங்களில் காணப்படும் நிலுவை குத்தகையை அறவிடுவதற்காக போதிய அளவு சான்றுகளை தேடிக்கொள்வது சிக்கலாக இருப்பதால் அறவீடுகள் தாமதமாகியுள்ளதுடன் தகவல்களை தேடி விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 144 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,055,960 தொகையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 4,224,874 ஆக இருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 84 சதவீதமாக இருந்தது. | கடை வாடகை தொடர்ந்தும் நிலுவையாக காணப்பட்டமையால் அறவிடப்படும் வாடகை தொகையில் அதிகாமானவை நிலுவை கடை வாடகைக்காக ஈடு செய்யப்படதால் நடப்பாண்டு அறவீடுகள் குறைந்த மட்டத்திலும் காணப்பட்டன. தொடர்ந்தும் வருமான பரிசோதகர் பதவி வெற்றிடமாக காணப்படுதல் மற்றும் நாட்டில் காணப்படும் பொருளாதார பின்னடைவு காரணமாக வருமான அறவீடுகள் சிக்கலாக இருந்தன. விரைவில் நிலுவை வாடகையை அறவிடுவதற்காக விசேட நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. | நிலுவை கடை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (உ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் வெவ்வேறு நிறவனங்கள் /ஆட்களால் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 16 விளம்பர பதாதைகளிலிருந்து 2017 – 2022 வரையான காலப்பகுதியில் அறவிட வேண்டிய ரூபா 347,350 தொகை 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டு இருக்கவில்லை | 2017-2022 காலப்பகுதியில் நிறுவப்பட்டிருந்த அறிவித்தல் பதாதைகள் நடப்பாண்டு கலற்றி அகற்றப்பட்டுள்ளதால் அறவீடுகளில் சிக்கல் இருப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிக் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை அதிகார | வருமான பரிசோதகர்களை ஈடுபடுத்தி வெளிக்கள பரிசோதனை | நிலுவை வியாபார வரியை |

| | | | |
|---|---|---|---|
| | பிரதேசத்தில் தாபிக்கப்பட்டிருந்த 18 தொலைத்தொடர்பு கோபுரங் களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 201,000 ஆன வியாபார வரி அறவிடப்பட்டிருக்கவில்லை | ஒன்றின் மூலம் அனைத்து தொடர்பாடல் கோபுரங்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (எ) | மாகாண சபை பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,207,932 தொகையும், முத்திரைக் கட்டணங்கள் ரூபா 11,620,091 தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிலுவை நீதிமன்ற தண்ட பணம் மற்றும் முத்திரை கட்டணங்களை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை நீதிமன்ற தண்ட பணம் மற்றும் முத்திரை கட்டணங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஏ) | 2013-2022 காலப்பகுதிக்குரிய சபைக்கு சொந்தமான 02 இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 6,605,201 ஆன நிலுவை இயந்திர வருமானம் அறவிடப்பட்டு இருக்கவில்லை | நிலுவை இயந்திர வாடகை அறவிடுவதற்காக பல கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மூலம் விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு உள்ளூராட்சி மன்ற நிறுவனத்திற்கு ஒரு கிராமிய விளையாட்டரங்கு வீதம் 33 விளையாட்டரங்குளை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலை திட்டத்தின் கீழ் ரூபா 1,470,000 தொகை செலவிட்டு 2021 நவம்பர் 08 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரன்தெனிகொட யாய விளையாட்டரங்கு 2022 அக்டோபர் 12 ஆம் திகதி வரை விளையாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாத காரணத்தால் அங்கு புற்கள் வளர்ந்து காணப்பட்டன. | ரந்தெனிகொட யாய விளையாட்டரங்கு பிரதேச செயலகத்தின் பொறுப்பில் காணப்படுவதால் பிரதேச சபைக்கு கையேற்று விளையாட்டு நடவடிக்கை களுக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன் | செலவினங்களை மேற்கொள்ளும் போது செலவினத்தின் பொருளாதார தன்மை தொடர்பில் கருத்திற்கொண்டு சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைகுரிய 04 நூலகங்களில் 2001 ஆம் ஆண்டிலிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் வாசிப்போருக்கு வழங்கப் பட்டிருந்த ரூபா 75,217 பெறுமதியான 477 நூலக | புத்தகங்களை பெற்றுக் கொள்வதற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்ட போதும் முகவரிகள் வேறுபட்டதால் குறித்த அவர்களை தேடுவது சிரமமாக உள்ளது தற்போது பதிலீடாக 200 புத்தகங்களின் | வாசிப்போருக்கு வழங்கப்பட்டிருந்த புத்தகங்களை மீளப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | புத்தகங்கள் 2023 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் மீண்டும் ஒப்படைப்படைக்கப்பட்டிருக்க வில்லை | பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள தால் நூலக ஆலோசணைக் குழுவிற்கு சமர்ப்பித்து எதிர்வரும் நடவடிக்கைகளை எடுக்கின்றேன். | |
| (ஆ) | சபைக்கு உரிய நிலையான சொத்துக்கள் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள போதும் பௌதீக ரீதியாக இருப்பதை உறுதிப்படுத்தாத ரூபா 63,300 மதிப்பீட்டுப் பெறுமதியான 05 காணிகள் மற்றும் ரூபா 152,000 மதிப்பீட்டு பெறுமதியான 3 கட்டிடங்களும் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | தொடர்ந்து வருடக் கணக்காக இருந்து வரும் கணக்குகளில் இருந்தும் நிலையான சொத்துக்களை பௌதீக ரீதியாக இனங் கண்டு அதனை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன். அபிவிருத்தி நடவடிக்கை களின் போது தற்போது 20 ஆண்டுகளுக்கு முன்னர் உடைத்து அகற்றப்பட்ட கட்டிடங்களாக இருப்பதால் ஆவணங்களில் இருந்து அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுபப்பேன். | சபைக்குரிய காணி மற்றும் கட்டிடங்கள் பௌதீக ரீதியாக இருப்பதை உறுதிப் படுத்துவதற்கு நடவடிக்கை வேண்டும் |

3.3 <u>சொத்துக்கள் முகாமைத்துவம்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு உரியதாக இனங் காணப்பட்டிருந்த 19 காணிகள் மற்றும் 71 மயானங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | குறித்த காணி மற்றும் மயானங்களின் பூமி அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொண்டு மதிப்பீடு செய்வதற்காக சபை நிதி நிலைமையை கருத்தில் கொண்டு தேவையான எதிர்வரும் நடவடிக்கைளை மேற்கொள்வேன். | சபைக்குரிய காணி மற்றும் மயான பூமிகளின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

3.4 **ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை நிதியத்திலிருந்து ரூபா 553,476 செலவிடப்பட்டு கெஹெலிய விவசாய அமைப்பின் கட்டிடத்தின் சுவர் மற்றும் கூரை நிர்மாண நடவடிக்கைகள் 2022 ஜூன் 1 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் சுவர் கட்டுவதற்காக கொடுப்பனவும் செய்யும்போது தவறுதலாக அளவீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 31,746 மற்றும் சாந்து பூசுவதற்காக ரூபா 5,630 என மொத்தம் ரூபா 37,106 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே கட்டிடத்தின் கதவு மற்றும் யன்னல்களுக்காக மதிப்பீடு மற்றும் அளவீட்டு பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட பிரகாரம் முதலாவது தர | கணக்காய்வு சந்தர்ப்பத்தின் போது ஏதேனும் குறைபாடுகள் இடம் பெற்றிருந்தால் மீண்டும் சரியான அளவீட்டை பெற்றுக் கொள்ளப்பட்டு சரியான அளவீட்டு பத்திரம் மற்றும் அனைத்து குறைபாடுகளையும் பூர்த்தி செய்து குறித்த நிழற்படங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறிய தருகிறேன். | பதிலை ஏற்றுக்கொள்ள முடியாததுடன் மதிப்பீட்டின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அளவீட்டு பத்திரங்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |

பலகை பயன்படுத்துதல் பூச்சி பூசுதல் மற்றும் பித்தளை சரணேர் போன்ற் உப பாகங்கள்இடப்படாமல் இருந்தவுடன் இடப்படாமல் இருந்ததுடன் அதற்குரியதாக கொடுப்பினவு செய்யப்பட்டிருந்த ரூபா 67,543 கூடுதலாக கொடுப்பினை செய்யப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 06 பதவிகளுக்குரிய அங்கீகரிக் கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 07 ஊழியர்கள் பற்றாக்குறை யாக காணப்பட்டதுடன் கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | வெற்றிடங்களை பூர்த்தி செய்து தருமாறு உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும் |
| (ஆ) | சபையில் சேவை புரிந்த 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய் ரூபா 31,250 ஆன விழா முற்பணம் ரூா 2,800 ஆன விசேட முற்பணக் கடன் மீதிகள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை | தற்போது சேவை புரிவோரிடமிருந்து கடனை விரைவில் அறவிடுவதற்கும் சேவையில் இல்லாத வர்களின் பிணையாளர் களிடமிருந்து அறவிடுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | குறித்த காலப்பகுதியில் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.3 <u>பாதீட்டுக் கட்டுப்பாடு</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் ஆண்டின் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே 2 சதவீதம் முதல் 65 சதவீதம் வரையிலும் மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே 2சதவீதம் முதல் 88 சதவீதம் வரையான கருத்திற் கொள்ளக்கூடிய விலகல் அவதானிக்கப்பட்டதால் வருமான செலவினக் கட்டுப்பாட்டில் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | சேதன பசளை உற்பத்திக்காக இயந்திரங்கள், பொறிகள் இல்லாமை எரிபொருள் பற்றாக்குறை மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் குறைவடைந்தமை மாநாட்டு மண்டபத்தில் உற்சவங்கள் விழாக்கள் மட்டுப்படுத்தப்பட்டமை போன்றவையால் வருமான விலகல் காணப்பட்டதாகவும் அடுத்த பாதீட்டை தயாரிக்கும் போது விசேட காணோம் என்று செலுத்துவதாகவும் அறியத் தருகிறேன் | சரியான பாதீடு தயாரிக்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் நிறைவேற்றப்பட வேண்டும் |